படித்ததில் பிடித்தது… – The life of Mine

thelifeofmine3.wordpress.com/2024/07/16/poem-9/

July 16, 2024

எழுத்துக் கூட்டியாவது மனிதர்களை வாசித்து விடுகிறேன்…
– கல்யாண்ஜி

இன்றைக்காக வாழ்வேன் நாளையும் இதே கதைதான்.
– பேயோன்

கோவிலுக்கு வெளியே தூக்கி போடுவர்! கோவிலுக்கு உள்ளே துதித்து போடுவர்!
சில்லரையை….
– Black Beauty

எல்லா மயிர்களையும் வெட்டுகிற அம்பட்டருக்குத் தெரியும் ஜாதி என்பது எதற்கும் உதவாத மயிரென்று
-சாமான்யன்

நான் இரும்பாக இருந்தேன் கண்ணீரின் ரசவாதம் என்னைப் பொன்னாக்கியது,,,
– கவிக்கோ அப்துல் ரகுமான்

பால்மனம் மறந்தவுடன் காமத்தில் சேர்த்துவிட்டார்கள் பெண்ணின் மார்பகத்தை!!!
– The Tamil Poetry

யாராவது பரிவுடன் ஆறுதல் சொல்லும்போது நிர்வாணமாக தின்றுகொண்டிருப்பதுபோல மிகவும் கூச்சமாகிவிடுகிறது
– மனுஷ்ய புத்திரன்

எல்லோரும் என்னைப் போன்றவர்களென்று நினைத்துவிட்டேன்.
நல்லவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்
– லியோ டால்ஸ்டாய்

ஒரு குருடனுக்கு கண் தெரிந்து விட்டால்,
அவன் முதலில் தூக்கி போடுவது அவ்வளவு நாள் அவனுக்கு துணையாக நின்ற அவனது தடியைத்தான்.
அவ்வளவுதான் வாழ்க்கை...!!!
– Unknown

பார்வையற்றவர்களின் வானவில்லாக
காது கேட்காதவர்களின் பெயராக பேச முடியாதவர்களின் பிடித்த சொல்லாக நடக்க முடியாதவர்களின் சிறகுகளாக இருந்துவிட்டுப் போகிறேன் (irunthuvittu Pongal)
– Unknown

பட்டும் படாமல்
தாமரை இலையில்
தண்ணீரைப்போல மாறிவிட்டேன்
என்கிறார்கள் இப்போ
தெல்லாம் அந்த தாமரை
இலைகூட எனக்கு இல்லை
காற்றில் அந்தரமாய் பறந்து
கொண்டிருக்கிறேன்
ஒரு நீர்த்துளியாக
– மனுஷ்ய புத்திரன்

இப்படியெல்லாம்
இப்படியெல்லாம் செய்தால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் இப்படியெல்லாம் செய்யாமல் இருந்தால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்
இப்படியெல்லாம் நடக்க வேண்டாமென்று மற்றவர்கள் சொல்வார்கள் இப்படியெல்லாம் நடந்துவிட்டதேயென்று மற்றவர்கள் சொல்வார்கள் நம்மைப்போலவே மற்றவர்களும் மற்றவர்களைப் பற்றியே
-யுகபாரதி

மனது சோர்வுற்றிருக்கையில் செய்யக் கூடாததைச் செய்கிறோம் பிடித்தமானவர்களுடன் பிடிக்காதவற்றை மணிக்கணக்காகப் பேசுகிறோம் விரும்பிய காரியத்தின் மீது வெறுப்பு கொள்கிறோம் சிந்தனைகளையும் கேள்விகளையும் வீரியத்தோடு எழுப்பி அப்போதே

அதிலிருந்து வெளியேறத் துடிக்கிறோம் அழுவதற்காகத் தனிமைப்பட்டு ஆறுதல் சொல்பவர்களைத் திட்டுகிறோம் மீண்டும் மீண்டும் மனது ஏன் சோர்வுற்றதென யோசித்து மீள இயலாச் சோர்வில் விழுந்து கிடக்கிறோம்.
– யுகபாரதி

உனக்கு என்ன தோன்றுகிறதோ அதை அப்படியே எழுது. அது கதையா, சுட்டுரையா, அல்லது ஏதோ சும்மா எழுதியிருக்கியா என்பதை படிப்பவர்கள் முடிவு செய்து கொள்வார்கள். அவர்களை பற்றி நீ கவலைப்பட வேண்டாம். அவர்கள் என்ன விரும்புகிறார்கள் என அவர்களிடமே கேட்டு அதை எழுதுவதற்கு நீ ஒன்றும் சரவணபவனில் வேலை செய்யும் வேலை ஆள் அல்லவே, அவர்கள் சாம்பார் கேட்டால் மிக சரியாக சாம்பாரை கொண்டு போய் ஊற்ற.
– ராம்